# True Disciple

# உண்மை சீஷன்

March - April 2019 மார்ச் - ஏப்ரல்

A Bi-Monthly News Bulletin of City Revival AG Church




## கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறது

## The LORD'S Coming is near

(யாக்கோபு 5:8 James)

# இயேசு சீக்கிரம் வருகிறார்

பாஸ்டர். **ஜெரி டேனியல்**

"இயேசு சீக்கிரம் வருகிறார்" வெளி. 22 : 7, 20.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இயேசுவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சீக்கிரமாய் வரப்போகிறார். அவருடைய இரண்டாம் வருகையைக் குறித்து வேதம் அதிகமாக நமக்குக் கூறுகிறது. இதைக் குறித்துச் சிந்திப்பது நம்மை அவருடைய வருகைக்கு ஆயத்தமாக்க உதவியாயிருக்கும். முழு வேதத்திலும் 1845 இடங்களில் இரண்டாம் வருகையைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் 318 வசனங்கள் இதைக் குறித்துக் கூறுகின்றன. புதிய ஏற்பாட்டில் 23 புஸ்தகங்களில் இந்த மகிமையான நிகழ்வைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. இயேசு மெய்யாகவே சீக்கிரம் வருகிறார். இனி காலம் செல்லாது. (வெளி. 10 : 6).

## 1. இரண்டாம் வருகையின் வாக்குத்தத்தங்கள்
**(THE PROMISE OF THE SECOND COMING)**

இயேசு, ' நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்தில் நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்' என்றார் (யோவான் 14 : 3). இயேசு பரம் ஏறிய பின் தூதர்கள், 'உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்' என்றார்கள் (அப். 1:8). அப்போஸ்தலனாகிய பவுல், 'கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்' என்று கூறுகிறார் (1தெச. 4 : 16)

## 2. இரண்டாம் வருகையின் நோக்கம்
**(THE PURPOSE OF THE SECOND COMING)**

- தம்முடைய வாக்குத்தத்தத்தையும் தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றுவதற்கு வருகிறார் (வெளி. 22 : 12, 20; யோவான் 14 : 3). இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்துப் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசனங்கள் கூறப்பட்டுள்ளன. அவையனைத்தையும் நிறைவேற்றும்படி இயேசு சீக்கிரம் வருகிறார்.
- மரித்த அனைவரையும் எழுப்பவும் உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களை மறுரூபப்படுத்தவும் இயேசு வருகிறார் (1தெச.4 : 16; 1கொரி. 15 : 51,52).
- தேவ ஜனங்களுக்குப் பலனளிக்கும்படி இயேசு வருகிறார். அவனவன் கிரியைகளுக்குத் தக்க அவனவனுக்கு பலனளிப்பார் என வேதம் கூறுகிறது (மத். 16 : 27 ; வெளி. 22 : 12).
- தேவனை அறியாதவர்களுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படி இயேசு வருகிறார் (1தெச.1: 7; யோவான் 5 : 28, 29).
- தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபித்து என்றென்றும் பூமியில் அரசாட்சி செய்யும்படி வருகிறார் (தானி. 7 : 14 ; வெளி. 9 : 11, 16)

## 3. இரண்டாம் வருகையின் நேரம்
**(THE PERIOD OF THE SECOND COMING)**

இயேசு கிறிஸ்து வரும் நாளையாவது நாழிகையாவது ஒருவனும் அறியான் (மாற்கு 13 : 32). திருடன் வருகிற விதமாய் கர்த்தருடைய நாள் வருமென்று வேதம் சொல்லுகிறது (1தெச. 5 : 2 ). ஆகவே இயேசு கிறிஸ்துவினுடைய வருகைக்கான நாளைக் குறிப்பது முட்டாள்தனமானது. வேதத்திற்குப் புறம்பானது. ஆகிலும் கடந்த நாட்களில் பலர் இயேசு இந்த நாளில் வருவாரென்று கூறி ஏமாந்து போயுள்ளனர்.

வேதம் அவருடைய வருகைக்கு முன் நடைபெறும் சில அடையாளங்களைக் கூறியுள்ளது (2 தீமோ. 3 : 1-5; மத். 24: 4-12). இந்த அடையாளங்கள் இயேசு சீக்கிரம் வரப்போகிறார் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர் மாரநாதா அல்லது கர்த்தர் வருகிறார் என்று கூறி வாழ்த்தினர் (1 கொரி. 16 : 22). முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களே அவருடைய வருகையை அதிகமாக எதிர்பார்த்தவர்கள் என்று சொன்னால். நாம் எவ்வளவு அதிகமாக எதிர்பார்த்து ஆயத்தமாக வேண்டும். வருகிறவர் இன்னும் கொஞ்சக்காலத்தில் வருவார். தாமதம்பண்ணார் (எபி. 10 : 37).

## 4. இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படுதல்
**(THE PREPARATION FOR THE SECOND COMING)**

நாம் அவருடைய வருகைக்கு ஆயத்தப்படுவதற்குப் பல வழிகளை வேதம் நமக்குக் கூறுகிறது. அவைகளில் சிலவற்றை நாம் இங்கே பார்போம்.

**பரிசுத்தமாயிருங்கள் : Purify Yourself**

அவருடைய வருகைக்கு ஆயத்தமாவதற்குப் பரிசுத்தம் மிகவும் அவசியம் என்று வேதம் வலியுறுத்துகின்றது. அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிற எவனும் அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போலத் தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான் என்று 1 யோவான் 3 : 3 கூறுகிறது. பரிசுத்தமில்லாமல் ஒருவனும் அவரை தரிசிப்பதில்லை (எபி. 12 : 14). உலகத்தில் இன்று பாவம் பெருகிக் கொண்டு இருக்கிறது. ஆனால் தேவன் தம்முடைய ஜனங்கள் பரிசுத்தத்தில் வளரவும், பெருகவும் வேண்டுமென்று விரும்புகிறார் (வெளி. 22 : 11, 12).

நாம் பரிசுத்தமாய் வாழ்வதற்குத் தேவன் நமக்கு அவருடைய சுத்திகரிக்கும் இரத்தம் (1 யோவான் 1 : 7), அவருடைய வார்த்தை (சங். 119 : 9, யோவான் 17 : 17) மற்றும் பரிசுத்த ஆவியானவரை (2 தெச. 2 : 15) நமக்கு உதவியாகத் தந்திருக்கிறார். நாம் நம்முடைய பேச்சு, சிந்தை, செயல், உறவுகள் அனைத்திலும் பரிசுத்தத்தைக் காத்துக் கொண்டு கறைதிரையற்ற மணவாட்டியாக ஆயத்தமாயிருக்க வேண்டும் (பிலி. 1 : 10, 11; 1 தெச. 5 : 23 ; எபே. 5 : 27 ; 2 பேதுரு 3 : 11).

**ஜெபத்தில் விழித்திருங்கள் :** Pray with watchfulness

நாம் அவருடைய வருகைக்கு ஆயத்தமாவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருக்க வேண்டும் என்று இயேசு கூறுகிறார் (லூக். 21 : 36). இன்று உலகம் மிகவும் துரிதமாகச் சென்று கொண்டிருக்கிறது. பல வேலைகளை

வேகமாகச் செய்வதற்குப் பல கருவிகள் இருந்த போதிலும் ஜனங்களுக்கு நேரம் குறைவாகவே காணப்படுகிறது. இதில் அதிகமாகப் பாதிக்கப்படுவது ஜெப நேரம். நாம் அதிக கவனத்துடன் விழித்திருக்க வேண்டுமென்று 10 கன்னிகைகள் உவமைகளில் இயேசு போதிக்கிறார் (மத். 25 : 1-13). அவருடைய சமூகத்தில் அதிக நேரம் காத்திருக்கும் போது ஆவிக்குரிய வாழ்க்கையில் அதிக விழிப்புள்ளவர்களாக இருப்போம். இரண்டாம் வருகையைக் குறித்துப் பவுல் எழுதும்பொழுது இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்று கூறுகிறார் (1 தெச. 5 : 17). அப்போஸ்தலனாகிய பேதுரு எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. ஆகவே ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள் (1 பேதுரு 4 : 7) என்று எச்சரிக்கிறார். உங்களது செல்போன் மற்றும் தற்கால தொழில்நுட்ப கருவிகள் உங்கள் ஜெப நேரத்தை திருட இடமளிக்காதீர்கள்.

**சுவிசேஷத்தை அறிவியுங்கள் Proclaim the Gospel**

அப்போஸ்தலனாகிய பவுல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாக, சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் திருவசனத்தை ஜாக்கிரதையாய்ப் பிரசங்கம் பண்ணு என்று தீமோத்தேயுவிற்குக் கட்டளையிடுகிறார் (1 தீமோ. 4 : 2). நாம் பரிசுத்தமாயிருந்து, விழித்திருந்து ஜெபிப்பதோடு, சுவிசேஷத்தையும் துரிதமாய் அறிவிக்க வேண்டும். எல்லா ஜனங்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது இயேசுவினுடைய சித்தம் (2 பேதுரு 3 : 9). இந்த இராஜ்யத்தின் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல மக்களுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். அப்பொழுது முடிவு வரும் என்று இயேசு கூறினார் (மத். 24 : 14). அவருடைய சுவிசேஷத்தை வெட்கப்படாமல் அறிவிக்க வேண்டும் (ரோமர் 1 : 16). சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ என்று பவுல் கூறுகிறார் (1 கொரி. 9 : 16). மனுஷன் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன். மனுஷன் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவிற்கு முன்பாக அறிக்கை பண்ணுவேன் என்று இயேசு கூறினார் (மத்.10 : 32, 33). தேவன் நமக்கு அவருடைய ஊழியத்தைச் செய்வதற்குத் தாலந்துகளையும், வரங்களையும் தந்திருக்கிறார். அவைகளை நாம் புதைத்துப் போடாமல், உண்மையாய்ப் பயன்படுத்தி அவருடைய வருகைக்குப் பாத்திரவான்களாய் மாறுவோம் (மத். 25 : 14 – 30). மாராநாதா!

## ஆண்கள் ஐக்கியம் - Men's Fellowship



**3வது**
**திங்கட்கிழமை**
**மாலை 7.00 மணி**

திருச்சபையிலுள்ள
அனைத்து ஆண்களும்
பங்குபெறும்படி
அன்புடன் அழைக்கிறோம்.

# இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளை

*இயேசு அவர்களை நோக்கி : வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென். மத்தேயு 28:18-20*

2019ம் ஆண்டு நமக்கு, "ஆத்தும ஆதாயம் மற்றும் எழுப்புதலின் ஆண்டாக" இருப்பதை அறிவோம். இது நமது விருப்பமும் தரிசனமும் மட்டுமல்ல. உண்மையில் இது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்குக் கொடுத்த பிரதான கட்டளையாய் இருக்கிறது.

நாம் இயேசுவின் பிரதான கற்பனைக்கு (மத்தேயு 22: 37-39) கீழ்படிவது எவ்வளவு அவசியமோ அதற்கு இணையாக அவரது பிரதான கட்டளைக்கு கீழ்படிவதும் அவசியமாகும். இயேசு மத்தேயு 28: 18-20 வசனங்களில் இதைக் குறித்து பேசும் நான்கு காரியங்களை (சகல) இத்தியானத்தின் வாயிலாகக் கற்று, அதை நம் வாழ்வில் எப்படி அப்பியாசப்படுத்தலாம் என்பதைக் காண்போம்.

**சகல அதிகாரம் (வல்லமை)-(வ-18)**

இயேசு கிறிஸ்து இப்பூமியில் ஊழியம் செய்த நாட்களில் தமது அதிகாரத்தை பயன்படுத்துவதை நாம் காண முடியும். இயேசு அதிகாரமுடையவராய் போதித்தார் (மத்தேயு 7:28,29), அற்புதங்களை செய்தார் (மத்தேயு 8:27), பாவங்களை மன்னித்தார் (மத்தேயு 9:2,3), மற்றும் பிசாசுகளைத் துரத்தினார் (மத்தேயு 9:33). ஜனங்கள் இதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். ஆதாம் தனது கீழ்படியாமையால் சாத்தானிடம் இழந்துவிட்ட சகல அதிகாரத்தையும் இயேசு தனது கீழ்படிதல், மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் மூலமாக மீட்டெடுத்தார். அந்த அதிகாரத்தை இன்று நமக்கு அளித்துள்ளார் (மாற்கு 16;15-18). இப்பொழுது நாம் இந்த அதிகாரத்தை விசுவாசத்துடன் பெற்றுக்கொண்டு கீழ்படிதலுடன் அதை பயன்படுத்தி இயேசுவின் பிரதான கட்டளையை நிறைவேற்ற வேண்டும்.

**சகல தேசம் (மக்கள்)-(வ-19)**

"நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளைகளையும் சீஷராக்கி" (மத். 28:19) என்று இயேசு கூறுகிறார். சகல ஜாதிகள் என்பது சகல மக்களையும் குறிப்பதாகும். உலகத்தில் 17,000 வகையான மக்கள் இனங்கள் (People Groups) இருப்பதாக ஒரு புள்ளி விவரம் தெரிவிக்கிறது. அவற்றில் 7,000 க்கும் மேற்பட்ட மக்கள் இனங்கள் இன்னும் கிறிஸ்துவைப்பற்றி கேள்விப்படவே இல்லை. எவ்வளவு பரிதாபம்! இயேசு நமக்கு அதிகாரத்தை அளித்தது பெருமை கொள்வதற்காக அல்ல. மாறாக, அதைக்கொண்டு இயேசுவை அறியாதவர்களுக்கு இரட்சிப்பின் நற்செய்தியை அறிவிக்கவே. பவுல் 1 கொரிந்தியர் 9:16 ல் கூறுவது போல இரட்சிப்பின் நற்செய்தியை அறிவிப்பது நம் ஒவ்வொருவர் மேலும் விழுந்த கடமையாகும். எனவே இந்த ஆண்டில் உங்களுக்கு அறிமுகமான அனைவருக்கும் சுவிசேஷத்தை அறிவியுங்கள். ஒரு ஆத்துமாவையாவது இயேசுவண்டை வழிநடத்துங்கள்.

**சகல உபதேசம் (இயேசு கற்பித்த யாவையும்) - (வ-20)**

சுவிசேஷப்பணி என்பது ஆத்துமாக்களை ஆதாயம் செய்தல். உபதேசம் என்பது சீஷராக்குதல். பிரதான கட்டளை என்பது ஆத்தும ஆதாயம், ஞானஸ்நானம், மற்றும் சீஷராக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

சீஷராக்குதல் என்பது புதிய விசுவாசிகளை நல்லதொரு சபை ஐக்கியத்திற்குள் வரவழைத்து அவர்களை விசுவாசத்தில் கட்டி எழுப்புவதாகும். சீஷன் என்றால் யார்? சீஷன் என்றால் கற்றுக்கொள்பவன். நாம் பிறரை சீஷராக்க வேண்டுமெனில் நாம் முதலில் ஆர்வத்துடன் கற்றுக்கொள்பவர்களாய் இருத்தல் அவசியம். எனவே நாம் வேத சத்தியங்களை ஆழமாக கற்றிடல் வேண்டும். சீஷத்துவம் என்பது ஆவிக்குரிய வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் குறிப்பதாகும். எபிரெயர் 5:12 ல் கூறப்பட்டுள்ளது போல இன்றைய சூழ்நிலையில், நாம் ஆவிக்குரிய குழந்தைகளாய் இருப்பது சரியல்ல; மாறாக நாம் உபதேசிக்கிறவர்களாய் இருத்தல் அவசியமாகிறது. எனவே நாமும் வளர்ந்து அநேகரை இயேசுவின் சீஷராக்குவோம்.

**சகல நாட்கள் (வ–20)**

''இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்'' (மத்தேயு 28: 20). எத்தனை ஆசீர்வாதமானதொரு வாக்குத்தத்தம்! மத்தேயு 1:23 ல் இயேசு "இம்மானுவேல்" என்று அழைக்கப்படுகின்றார். இம்மானுவேல் என்பதற்கு "தேவன் நம்மோடு இருக்கிறார்" என்று அர்த்தமாம். சகல நாட்களிலும் நம்மோடு இருக்கின்ற தேவனை நாம் சேவிக்கின்றோம். இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து விடுவித்து அழைத்துவர மோசேயை தலைவராக நியமித்த போது, "நான் உன்னோடே இருப்பேன்" (யாத் 3:12) என்று வாக்களித்தார். அவ்வாறே தேவன் யோசுவாவுடனும் கூடவே இருந்து அவனை இறுதிவரை வழிநடத்தினார் (யோசுவா 1:5). பவுல் கொரிந்து பட்டணத்தில் ஊழியம் செய்ய சென்ற பொழுதும் கர்த்தர் இதே வாக்குறுதியை (அப்போஸ் 18:9,10 ) பவுலுக்கு அளிப்பதை அறிகிறோம். டேவிட் லிவிங்ஸ்டன் என்ற தேவ மனிதன் இதே வாக்குதத்தத்தை உறுதியாய் நம்பி, பற்றிக்கொண்டு 'இருண்டகண்டம்' எனப்பட்ட ஆப்பிரிக்காவிற்கு சென்று இரட்சிப்பின் வெளிச்சத்தை பிரசித்தமாக்கினார். பெரும் சவால்களையும், கடுமையான பாடுகளையும் அவர் சந்திக்க நேரிட்டாலும் இந்த வாக்கினாலே ஸ்திரமாய் தாங்கப்பட்டு, வெற்றிகரமாய் தன் ஊழியத்தை நிறைவேற்றினார்.

உலகளாவிய புள்ளிவிவரம் ஒன்று இவ்வாறு கூறுகிறது. 95% கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்கென்று வாழ்நாள் முழுவதும் ஒரு ஆத்துமாவை கூட ஆதாயம் செய்வதில்லை. 80% கிறிஸ்தவர்கள் இயேசுவைப்பற்றி ஒரு முறை கூட யாரிடமும் பேசுவதில்லை. 2% கிறிஸ்தவர்கள் மட்டுமே இயேசுவுக்காய் ஊழியம் செய்கின்றனர். இது எவ்வளவு வேதனைக்குரியது! டேவிட் லிவிங்ஸ்டன் ஆப்பிரிக்கா சென்ற பொழுது மக்கள் இயேசுவை அறியாதவர்களாய் நரமாமிச பட்சிகளாய் இருந்தார்கள். ஆனால் இன்றோ 60% ஆப்பிரிக்க மக்கள் இயேசுவை அறிந்து கிறிஸ்தவராய் உள்ளனர். டேவிட் லிவிங்ஸ்டன் என்ற அந்த தனிமனிதன் இயேசுவின் பிரதான கட்டளைக்கு முழுமனதுடன் கீழ்படிந்து மிகவும் பிரமிப்பூட்டக்கூடிய ஊழியத்தை செய்துமுடித்தார். பிரியமானவர்களே நாம் இயேசுவுக்காய் என்ன செய்ய போகிறோம்? கீழ்படிதலுடன் இயேசுவின் பிரதான கட்டளையை நிறைவேற்றுவோம்."இருக்கிறவராகவே இருக்கிறேன்" என்றவர் உங்களுடன் எப்பொழுதும் இருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

தொகுப்பு : *சகோதரி. சூசன்னா ஜான்*

# இயேசு கிறிஸ்துவின் வருகையின் அடையாளங்கள்

இன்று உலகத்தில் வாழும் பெரும்பான்மையான மக்கள் இயேசு சீக்கிரமாய் வருகிறார் என்று தெரியாமல் இருக்கிறார்கள். கிறிஸ்துவின் வருகைக்கான அடையாளங்கள் அவர் வருகை மிகச் சமீபம் என்பதைக் காட்டுகிறது.

**1. யுத்தங்கள், யுத்தங்களின் செய்திகள்** (மத். 24:6,7)

ஐக்கியநாடுகளின் சபை (U.N) ஏற்படுத்தப்பட்ட பிறகு இனி போர் நடக்காது என மக்கள் நினைத்தார்கள். ஆனால் அது ஏற்படுத்தப்பட்ட பின்பு 30க்கும் அதிகமான யுத்தங்களில் ஐந்து கோடிக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டார்கள். அதிகமான நாடுகள் மனிதர்களை கொல்லக்கூடிய மரண ஆயுதங்களை சேர்த்து வைத்துள்ளனர். அணு ஆயுத யுத்தம் எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம் என்ற சூழ்நிலை உண்டாகியிருக்கிறது.

**2. பஞ்சங்கள் ,கொள்ளை நோய்கள், பூமி அதிர்ச்சிகள்** (மத். 24: 7)

அநேக நாடுகள் வறுமையையும், பஞ்சத்தையும் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். மக்கள் தொகைப் பெருக்கத்தினால் இன்னும் பஞ்சங்கள் அதிகமாகும் நிலை உள்ளது. குணமாக்க முடியாத பலவித கொள்ளை நோய்களான எய்ட்ஸ், புற்று நோய்களும் உண்டாகிக் கொண்டிருக்கின்றன. கடந்த நூற்றாண்டைக் காட்டிலும் இந்நாட்களில் 100 மடங்கு அதிகமான பூமியதிர்ச்சிகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

**3. அக்கிரமத்தின் பெருக்கமும், அநியாயங்களும்** (மத்தேயு 24:12, 37-39)

வரலாற்றிலேயே இதுவரை நடந்திராத வகையில் பாலியல் முறைக்கேடுகளும் தவறான செக்ஸ் முறைகளும் இந்நாட்களில் வெட்கமில்லாமல் நடக்கின்றன. கருகலைப்பு, பெண் சிசுக்கொலை, தற்கொலைகள், போதை மருந்துகள் பெருகிக் கொண்டிருக்கின்றன. வன்முறை, குற்றங்கள், தீவிரவாதங்கள், சீர்கேடுகள் வெளிப்படையாக நடக்கின்றன. 2 தீமோ. 3:1-7வசனங்களில் கிறிஸ்துவின் வருகையின் போது 23 விதமான அக்கிரமங்கள் நடக்கும் என்று கூறப்பட்டுள்ளது. அவைகள் அனைத்தும் இப்பொழுது உலகத்தில் நடக்கின்றன.

**4. அறிவின் பெருக்கம்** (தானியேல் 12: 4)

ஆதாமுடைய காலத்திலிருந்து கி.பி. 1940ம் வருடம் வரை காணப்பட்ட அறிவை காட்டிலும் கடந்த 75 வருடங்களில் அறிவின் வளர்ச்சி உலகத்தில் 25 மடங்கு அதிகரித்துள்ளது. மொத்தத் தகவல்களைப் பார்க்கும் பொழுது மனித அறிவு ஒவ்வொரு 13 மாதங்களில் இரண்டு மடங்காகிறது. ஒவ்வொரு வருடமும் 22 லட்சம் புத்தகங்கள் புதிய தலைப்பின் கீழ் வெளிவருகின்றன. 14,000 இணையதளங்கள் ஒவ்வொரு நாளும் உருவாக்கப்படுகின்றன.

**5. உலகளாவிய பிரமாணம்** (தானி. 12:4, நாகூம் 2: 4)

கி.பி 1900 வருடம் வரைக்கும் மனிதனின் பிரயாண வேகத்தின் அளவு ஒரு மணி நேரத்திற்கு அதிகபட்சமாக 50 மைல்கள் மட்டுமே இருந்தது. ஆனால் இந்த காலங்களில் மனிதன் விண்வெளிக்கு ஒரு மணி நேரத்தில் 25,000 மைல்கள் பிரயாணம் செய்யக்கூடிய அளவில் விஞ்ஞானம் வளர்ந்துள்ளது.

**6. உலகளாவிய நற்செய்தி** (மத்தேயு 24:14)

விஞ்ஞான வளர்ச்சியின் உதவியால் இன்று சுவிசேஷம் உலகம் முழுவதும் எல்லா மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது. கிறிஸ்தவ மக்களின் வளர்ச்சி ஒரு நாளைக்கு 1.75 லட்சம் என்ற அளவில் உள்ளது. உலகலாவிய நற்செய்தி, தொலைக்காட்சி, வானொலி, பல்வேறு மொழிகளில் வேதாகம் மொழி பெயர்ப்புகள் மற்றும் இணையதளம் மூலம் இன்று நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

**7. இஸ்ரவேல் தனி நாடாக உருவாகுதல்** (மத்தேயு 24: 32, 33)

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு மற்றொரு அடையாளம் இஸ்ரவேல் தனி நாடாக உருவாகுதல் ஆகும். கி.பி.70முதல் கி.பி. 1948 வரை யூதர்களுக்குச் சொந்த நாடு இல்லாதிருந்தது. 1948 மே 15ம் நாள் இஸ்ரேல் தன் நாடாக மாறியது. கடந்த 70 வருடங்களில் ஆயிரக்கணக்கான யூதர்கள் தங்கள் சொந்த நாடாகிய இஸ்ரேலுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். இது கிறிஸ்துவின் வருகை எந்த நேரத்திலும் இருக்கலாம் என்பதைக் காட்டுகிறது.

**8. கள்ள கிறிஸ்துகளும், ஜனங்கள் வஞ்சிக்கப்படுதலும்** (மத்தேயு 24:3-5 )

கடைசி நாட்களில் ஜனங்கள் வஞ்சிக்கப்படுவார்கள் என்று இயேசு கூறினார். இன்று அதிகமான தவறான மதங்களும், மதச்சம்பந்தமான வஞ்சகங்களும், கள்ள தீர்க்கதரிசனங்களும் மலிந்துகிடக்கின்றன, இன்று உலகத்தில் 3000 கள்ள உபதேசங்கள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் சாத்தானை வணங்குதல், ஜோசியங்கள், செய்வினைகள், போன்ற பிசாசின் காரியங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. வெள்ளை மேஜிக், கருப்பு மேஜிக், ராக்இசை, கிறிஸ்தவ ராக் ஏராளமாய்ப் பெருகியிருக்கின்றன. கடைசி நாட்களில் சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள் (1தீமோ. 4:1)என்று பவுல் சொல்கிறார்.

**9. உபத்திரவம் மற்றும் விசுவாசிகள் பகைக்கப்படுதல்** (மத்தேயு 24:8-9)

சீனா, சூடான், ஆப்பிரிக்கா, சவூதி அரேபியா, வட கொரியா, ரஷ்யா மற்றும் முகமதிய தேசங்களில் கிறிஸ்தவர்கள் கொடுமைக்கு உள்ளாகிறார்கள். அநேக நேரங்களில் தங்கள் விசுவாசத்திற்காகக் கொல்லப்படுகிறார்கள், உலகம் முழுவதும் வேதனைகள் உண்டாகும். இரத்த சாட்சியாய் அநேகர் மரிக்கும் அளவில் உபத்திரவம் இருக்கும். இது இன்னும் கொடுமையாகவும் கடுமையாகவும் உபத்திரவ காலத்தில் பெருகும்.

**10. விசுவாசத்தை விட்டு விலகுதல்** (1தீமோ.4:1-3 ,2 தெச. 2:3 )

இந்த நாட்களில் சபைகளுக்குள் புதுவிதமான நம்பிக்கையை உண்டாக்கும் நிகழ்ச்சிகள் அதிகமாகவே உட்புகுந்துள்ளது. இரட்சிப்புக்கு ஒரே வழி இயேசுதான் என்பதை மறுதலிக்கிற அநேக உபதேசங்கள் இன்று வந்துவிட்டது. மேற்கூறப்பட்ட இரண்டு வேத பகுதிகளிலும் கடைசி நாட்களில் விசுவாச துரோகம் நேரிட்டு அநேகர் விசுவாசத்தை விட்டு விலகி போவார்கள் என்று வேதம் கூறுகிறது. வேத சத்தியத்தை விட்டு விலகி ஜனங்கள் போகிறதை உலகம் முழுவதும் இன்று காண முடிகிறது.

# ஜெபத்தில் காணப்பட வேண்டிய '4' எல்லாம்

*"எந்தச் சமயத்திலும், சகலவிதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்" (எபேசியர் 6:18).*

இந்த வசனத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் வார்த்தை 'சகல' 'எல்லா' (all) என்பதாகும். இந்த ஒரு வசனத்தில் மட்டும் 4 வகையான 'எல்லா' (all) என்ற பொருள்படும் வார்த்தை உள்ளது.

**1. எல்லா நேரத்திலும்**

உண்மையான விசுவாசி தொடரந்து எல்லா நேரத்திலும் ஜெப சிந்தனையோடு வாழ்கிறார். இதைத் தான் தெசலோனிக்கேயருக்கு எழுதும் நிருபத்தில் "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" (1 தெச 5:17) என்று பவுல் எழுதுகிறார். ஆம் நாம் தேவனோடு உரையாடுதல் இடைவிடாமல் எப்போதும் இருக்கும் பழக்கமாய் இருக்க வேண்டும் (அப் 10:2; 12:12). எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்று இயேசு கூறுகிறார் (லூக்கா 21:36).

**2. எல்லாவித ஜெபத்திலும்**

நம் வாழ்வே ஜெப வாழ்வாய் இருப்பதால், நம் ஜெபங்களும் பல வகைப்பட்டதாக இருக்கிறது. ஒரு கிறிஸ்தவனின் ஜெபம் கிரமமாகவும், திட்டமிடப்பட்டதாகவும், குறிப்பானதாகவும் இருக்க வேண்டும். அவசர தேவைகளுக்கும் ஜெபிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். நம்முடைய ஜெபங்கள் சில துதிகள் நிறைந்தும், ஆராதனைக்குரியதாகவும் மற்றும் பாவ அறிக்கை உள்ளதாகவும் இருக்கலாம். நாம் ஆவியோடு ஜெபிப்பதையும், உபவாசித்து ஜெபிப்பதையும், மன்றாடி ஜெபிப்பதையும், நன்றி செலுத்தி ஜெபிப்பதையும், பாவ அறிக்கை செய்து ஜெபிப்பதையும், போராடி ஜெபிப்பதையும்,பயிற்சி செய்ய வேண்டும். இவற்றைத் தான் "எல்லாவித ஜெபத்தோடும்' என்ற வார்த்தைகளால் அப். பவுல் குறிப்பிடுகிறார்.

**3. எல்லாவித மன உறுதியோடும்**

இது நாம் சோர்ந்துபோகாமல் ஜெபிக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. ஜெபித்தல் என்பது இயல்பாக காணப்படுவதோ அல்லது எளிதான காரியமோ அல்ல. ஜெபிப்பதற்கு கடின உழைப்பும், விடாமுயற்சியும் தேவை. எல்லாவித மன உறுதியும் தேவை. நீங்கள் யாருக்காக ஜெபிக்கிறீர்கள்? சோர்ந்துபோகாமல் ஜெபியுங்கள். நாம் இடைவிடாமல், விடா முயற்சியுடன் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு கற்பித்துள்ளார் (மத்தேயு 7:7; லூக்கா 18:1-8).

**4. எல்லா பரிசுத்தவான்களுக்காகவும்**

எல்லோருக்கும் நம் ஜெபம் தேவை. குறிப்பாக மற்ற விசுவாசிகளுக்காகவும், பரிசுத்தவான்களுக்குகாகவும் ஜெபித்தல் வேண்டும். தேவனுக்கு மிகப் பெரிதானதோ, அல்லது அற்பமானதோ எதுவும் கிடையாது. நாம் சில நேரங்களில் மட்டும், சிலருக்காக மட்டும், சில வகை ஜெபங்கள் மட்டும் ஜெபிக்கிறோம். ஆனால் தேவன் எல்லாவற்றிற்காகவும், எல்லோருக்காகவும், எல்லா நேரங்களிலும் நாம் ஜெபிக்கவேண்டுமென்று விரும்புகிறார்.

மொழியாக்கம். **சகோ.இம்மானுவேல்**

I will make a helper suitable for him. Gen 2:18

# AGAPE CHRISTIAN MATRIMONY

*Helping you to find your life partner*

*Venue* **CITY REVIVAL AG CHURCH** *Time* **10.00 a.m to 1.00 p.m**

*Days* **Tuesday & Saturday** **4.00 p.m to 6.00 p.m**

**Contact : 98438 51115, 99425 33383**







# MUSIC CLASS

## இசைப் பயிற்சி வகுப்பு

@

## City Revival AG Church

Cantonment, Jenne Plaza, Trichy - 1.

*EVERY TUESDAY 6.00 PM TO 8.00 PM*

Conducted by : **TRINITY SCHOOL OF MUSIC**

Key Board, Guitar, Rhythm pad & Drums

Contact : 9443119169



# BIBLE STUDY

## வேதப்பாடம்

ஒவ்வொரு ஞாயிறு மாலை 6.30 மணிக்கு

**Every Sunday @ 6.30 p.m**

தலைப்பு : **கடைசி கால நிகழ்வுகள்**

Topic : **End Time Events**

*தசமபாகம், காணிக்கைகள் & நன்கொடைகளை கீழ்கண்ட வங்கி கணக்கில் செலுத்தலாம்.*

## Your Offerings and Donations Can Be Sent to

A/c Name : City Revival AG Church
A/c Number : 35354599169
Bank Name : STATE BANK OF INDIA
IFSC Code : SBIN0000930
Branch Code : 00930

A/c Name : City Revival AG Church
A/c Number : 1196172000007824
Bank Name : KARUR VYSYA BANK
IFSC Code : KVBL0001196
Branch Code : 001196

# Jesus is coming Soon!

**_Rev. Dr. Jerry Daniel_**

*"Jesus is Coming Soon!" (Rev. 22:12,20)*

The Second Coming of Christ is given a great deal of importance in the bible and the study of it will enable us to be prepared for that great event. There are many more prophecies in the Old Testament relating to the Second Coming of Christ than there are relating to His first coming. The Second Coming of Christ is explicitly referred to 1,845 times in the Bible. It has been computed that 318 verses in New Testament refer to His return which is equal to approximately once in every twenty-five verses! 23 out of 27 books in the New Testament refer to this great and glorious event. To some this event could be a SHOCKING reality; to those who don't follow Christ, it may be a SAD reality; to the saved it will be a SWEET reality, but to all it will be SURE reality.

**I. The PROMISE of the Second Coming**

✦ Jesus promised about His second coming – "And if I go and prepare a place for you, I will come again and will take you to myself, that where I am you may be also" (John 14:3)

✦ The Angels predicted the second coming – After Jesus had ascended to heaven, the angels said in Acts 1:11, "Men of Galilee, why do you stand looking into heaven? This Jesus, who was taken up from you into heaven, will come in the same way as you saw him go into heaven.'

✦ The Apostles preached about the second coming – Paul says, 'For the Lord himself will descend from heaven with a cry of command, with the voice of an archangel, and with the sound of the trumpet of God (1 Thess. 4:16; I Cor. 15:51). Apostles James, John and Peter explicitly taught Jesus is coming again (Jas. 5: 7; I Jn. 3: 2; 2 Pet. 1: 16).

**II. The PURPOSE of the Second Coming**

✦ To fulfill His promise and the prophecies. Jesus is coming back to fulfill the promises he had made (Rev. 22:12, 20; John 14:3). There are hundreds of prophecies both in the old Testament and the New testament concerning the second advent of Jesus. Jesus is coming back to fulfill them all.

✦ To raise all the dead and translate the living. Jesus shall raise all the dead. The dead in Christ shall rise first followed by others (I Thess. 4:16; 1 Cor.15:51-52).

✦ To reward God's people. Jesus will come in the glory of His father with His angels, and then reward everyone according to his works (Matt. 16:27; Rev. 22:12).

- ✦ To execute righteous judgment on the wicked. 2 Thessalonians 1:7-8 says, `The Lord Jesus will be revealed from heaven with his mighty angels in flaming fire, inflicting vengeance on those who do not know God and on those who do not obey the gospel of our Lord Jesus.' (cf. Jude 14, 15)
- ✦ To establish his kingdom on the earth and to reign forever. Jesus will rule the earth as the King of kings. His dominion is an everlasting dominion which shall never end (Dan. 7:14; Rev. 19:11, 16).

**III. The PERIOD of the Second Coming**

Jesus said, "But concerning that day or that hour, no one knows, not even the angels in heaven, nor the Son, but only the Father" (Mark 13:32). The point He is making is that it is foolish to try and set dates concerning the Lord's return. No one knows the time when the Lord will return. There is no point in speculating about it. He will come like a thief (I Thess. 5:2). But the Bible describes several events which must occur before the Second Coming. The signs tell us that his coming is imminent. The first century Christians greeted each other saying, "Maranatha," or "Come, O Lord (I Cor. 16:22). If the first century Christians lived in such an eager anticipation of His return, how much more we need to be! For in just a little while, He who is coming will come and will not delay (Heb. 10:37).

**IV. The PREPARATION for the Second Coming**

The early church thought more about the Second Coming of Jesus Christ than about death or about heaven. The early Christians were not looking for a cleft in the ground called a grave but for a cleavage in the sky called Glory. They were watching not for the undertaker but for the upper taker. The saints of God have lived with an eager expectation of Christ's return. How can we also live in the light of His coming? Here are some practical ways for preparing ourselves for His glorious coming.

**1. PURIFY Yourself**

The Bible stresses the importance of holiness in awaiting Christ's return. I John 3:2,3 says, `Abide in Him, so that when he appears we may have confidence and not shrink from him in shame at his coming...Everyone who thus hopes in him purifies himself as he is pure.' The Lord who comes is holy and pure. Without holiness, no one can see God (Heb. 12:14). The world is becoming more and more filthy and wicked (Matt. 24:12). But God expects his people to be more and more holy (Rev. 22:11, 12). God has given his provisions for us to live a holy life. The blood of Jesus (I John 1:7), the Word of God (Ps. 119:9; John 17:17) and the Spirit of God (II Thess. 2:13) are the means by which we can be made holy. We must strive to be holy in our thoughts,

words, deeds and relationships (Phil. 1:10-11; I Thess. 3:13; 5:23; I Tim. 6:14; II Peter 3:10-12).

**2.PRAY with Watchfulness**

Another strongest emphasis in the Bible in regard to second coming of Jesus is the importance of being watchful. Jesus said, `Be always on the watch, and pray that you may be able to escape all that is about to happen, and that you may be able to stand before the Son of Man' (Luke 21:36). The world is busier than ever. Eventhough we have a lot of gadgets to do things faster, we don't have much spare time. The victim is always the prayer time. The enemy keeps devising new strategies to lull us to sleep by telling us that we have plenty of time. Jesus, in Mark 13: 32-37 repeatedly says that we need to be watchful. He reinforces the importance of watchfulness in the parable of ten virgins (Matt. 25: 1-13). The more time we spend with Him, the more alert we will be spiritually. Paul in the context of his teaching on Christ's return says that we should be praying without ceasing (I Thess. 5:17). Apostle Peter says, `the end of all things is near. Therefore be clear minded and self-controlled so that you can pray' (I Pet. 4:7). Someone said, `Pray when you feel like praying, pray when you don't feel like praying and pray until you feel like praying.'

**3. PROCLAIM the Gospel**

Paul tells Timothy, 'In view of Christ's appearing and his kingdom, I give you this charge: Preach the word' (II Tim. 4:2). This injunction to Timothy applies to all of us. We are not only to purify ourselves and pray, we are also called to proclaim the gospel. The Lord wants everyone to be evangelized (I Pet. 3:9). Jesus said, 'the gospel of the kingdom will be preached in the whole world and then the end will come' (Matt. 24:12). Do not be ashamed to share the gospel (Rom. 1:16). Paul says, `Woe to me if I don't preach the gospel' (I Cor. 9:16). Jesus said, `Whoever acknowledges me before men, I will also acknowledge him before my father in heaven. Whoever disowns me before men, I will disown him before my father in heaven' (Matt. 10:32, 33). Moreover the Lord has given all of us tasks to perform and talents to use, and He expects us to faithfully do it until He returns (Matt. 25:14-30).

Are you ready for His coming? If Jesus were to return today, would He find you faithfully serving Him and carrying out His will in the world? Or, would He find you skating around the edges, holding hands with the world? Would He find you inactive in the church? Would He find you doing His will or doing as you will? I challenge you to look at yourself and your walk with the Lord in the light of His coming. Do you want Him to come while you are living the life you are living right now?

# FOUR ALL'S OF THE GREAT COMMISSION OF JESUS

*Jesus said, "All authority in heaven and on earth has been given to me. Therefore go and make disciples of all nations, baptizing them in the name of the Father and of the Son and of the Holy Spirit, teaching them to obey everything I have commanded you. And surely I am with you always, to the very end of the age. Matthew 28: 18-10*

As you all know, 2019 is "The Year of Soul Winning and Revival" in our church. This is not just our choice and vision alone. But in truth it is the "Great Commission" given to us by our Lord Jesus Christ in Matthew 28: 18-20. We must obey this Great Commission as much as we obey the Great Commandment of Jesus (Matt 22: -37-39). But sadly the Great Commission is the Great Omission in most of the churches today. Let us learn through this meditation, the "Four All's" in the Great Commission and how we can implement it in our life.

## ALL AUTHORITY (POWER)

We see Jesus Christ exercising his authority throughout His ministry on earth. Everyone marveled at His authoritative preaching (Matt.7:28) and the miracles He did (Matt. 8:27). He had authority to forgive sins (Matt 9:2, 3), to heal the sick and to cast out demons (Matt. 9:33). Jesus, the Second Adam regained all the authority that first Adam had lost into Satan's hands. In His death and resurrection, He had conquered Satan, sin, and death. God had given all authority into His hands. Jesus has given the same authority to us (Mark 16: 15-18). Now we have to inherit this power with faith and exercise this authority with obedience to fulfil the "Great Commission".

## ALL NATIONS (PEOPLE)

This is a commission to take the Gospel to all nations, and is a definite change from Matthew 10:5-6, where the commission was limited to the Jews only. Statistics says that there are 17,000 people groups in this world. Out of this, 7000 are still to be reached with the Gospel. Jesus did not give us authority just to boast and brag but to reach the unsaved with the Gospel. Paul writes in I Corinthians 9: 16 that it is the bounden duty of every Christian to preach the gospel to the unsaved. We must share the good news of salvation to every unsaved person who comes into contact with us. Strive to win at least one soul for Christ this year.

## ALL COMMANDMENTS (PRECEPTS)

Evangelism is sharing gospel and winning souls. Evangelism alone is not the commission; after people are won, they should be baptized, which suggests a local church fellowship. They should also be taught, which suggests the teaching and preaching of the Word of God. Please keep in mind that our commission is not

simply "to win souls." It is to "make disciples"--which includes winning them, bringing them into a Christian fellowship, and building them up in the faith. Now, who is a disciple? A disciple is a learner. So to make disciples we must first become disciples by learning all the teachings of Jesus. This includes the whole Word of God. Man is to live by every word of God (4:4). All Scripture is profitable (2 Tim. 3:16). Discipleship is a life time process. It denotes spiritual growth and maturity. As written in Hebrews 5: 12 in times such as these we cannot afford to be babes rather be teachers. Hence let us grow and make disciples of Jesus.

## ALWAYS (PRESENCE)

"And surely I am with you always" (Matt 28: 20). What a blessed assurance! In Matthew 1: 23, Jesus is called Immanuel which means God with us. We serve a faithful God who is with us all the days of our life. When God told Moses to bring Israelites out of Egypt, He promised, "I will be with you". (Exodus 3:12) God gave the same promise to Joshua when he led the people into the Promised Land (Joshua 1: 5). God encouraged Paul with these promising words when he was ministering in the city of Corinth (Acts 18: 9, 10). This is the promise that carried David Livingstone into the heart of darkest Africa and that encouraged and enabled messengers of Christ down through the years. Though Livingstone faced great challenges and endured untold hardships, he was sustained by this promise of Jesus in Matthew 28:20.

A global statistics states that 95% of the Christians have never won a single soul for Christ. 80% of the Christians don't even speak of Christ. Only 2% are involved actively in fulfilling the Great Commission. How tragic! Since David Livingstone obeyed the Great Commission of Jesus wholeheartedly and did a pioneering missionary work in Africa, we have 60% per cent Christians in Africa today. My beloved, what are we going to do for Christ? Let us also obey Jesus in the same way and fulfill His Great Commission. Remember, the Great "I AM" is with you always.

பெரிய வெள்ளி ஆராதனை
GOOD FRIDAY SERVICE
ஏப்ரல் 19

உயிர்த்தெழுந்த ஞாயிறு ஆராதனை
RESURRECTION SUNDAY SERVICE
ஏப்ரல் 21

# The Signs of Jesus' Coming

Many live in this world today without knowing that Christ can come in their lifetime. The signs of the Christ are coming recorded in the bible point to His imminent coming. Let us see a few of them to enable us to be conscious of the fact that our Lord's coming is at hand.

1. **Wars and Rumors of war (Matt. 24:6,7).**

   Many people thought in the late forties that there won't be any war after the formation of United Nations Organization. But after its formation, there were more than 30 major wars and more than 50 million people were killed in various wars. Many countries are stocking deadly weapons and we don't know when a nuclear war will break out in the world.

2. **Famines, Pestilences and Earthquakes(Matt. 24:7).**

   Many countries face poverty and famine. Due to population explosion, the famine will still increase in the world. There are also pestilences like AIDS, venereal diseases, cancer and other plagues which are incurable. The number of earthquakes has increased hundredfold when compared to the last century.

3. **Abounding of Iniquity and Lawlessness (Matt.24:12; 37-39).** Sexual immorality and perverted sex is practiced today so openly without any shame than any other time in the history. Abortions, female foeticide, suicides and drug addictions are rampant. Violence, crime, corruption, terrorism are seen everywhere. 2 Timothy 3:1-7 records 23 iniquities that will be prevalent at the time of Christ's coming. If we read the newspaper, we can know that they are happening today on a daily basis.

4. **Increase of Knowledge (Daniel 12:4).**

   It has been reported that the knowledge in the past 75 years have increased 25 times than the knowledge accumulated in the world years from Adam to AD 1940. The total information known to mankind is doubling every 13 months. 2.2 million books are published every year. 14,000 websites are created every day.

5. **Worldwide Travel (Daniel 12:4; Nahum 2:4).**

   Upto 1900, man could travel at the speed of only 50 miles per hour. But in recent years due to jet age, man can travel in space more than 25,000 miles per hour.

6. **Worldwide Evangelism (Matt. 24:14).**

With the scientific advancements, the gospel is now preached to all the people of the world. The Christian population is growing at a rate of 1.75 lakh every day. This prophecy of world evangelism is being fulfilled through television, radio, missionaries, the translation of the Bible into many languages, and the internet.

7. **Establishment of Israel as a Separate Nation (Matt. 24:32,33).**

Another sign of the second coming of Jesus is the founding of the Israel as a nation. From AD 70 to AD 1948, the Jews did not have a homeland. Israel became a nation on May 15, 1948. Literally thousands of Jews have returned to the land of Israel in the past 70 years. This reveals that Christ may come to the world at any time.

8. **Religious Deception and Rise of False Religions (Matt. 24:3-5).**

Our Lord tells the disciples that one sign of the last days will be religious deception. “Many will come in my name, saying, I am Christ; and shall deceive many.”Never has there been as much deception in religion as we are seeing today. See also Matthew 24:23-26.It is estimated that over 3000 cults exist in the world today. We see an increase in astrology, Satanism, witchcraft, white magic. black magic, Rock and Roll, Christian Rock, Voodoo music and other demonic activities.

9. **Persecution and Suffering of Believers (Matthew 24:8-9).**

In countries such as China, Sudan, Africa, Saudi Arabia, North Korea, Russia, and many Muslim nations, Christians suffer much greater persecution and often times death for their faith. During the tribulation this suffering will be worldwide and will continue even to the point of martyrdom. This will increase in intensity and severity as the tribulation approaches.

10. **Apostasy and falling away from faith (2 Thess. 2:3 and I Tim. 4:1-3)**

In these two passages we find the Word of God teaches us that there will be a great falling away. We are seeing a falling away spiritually, morally, politically, and in every other aspect of our society today. The context deals with a falling away spiritually, a departing from the truths that are taught in God's Word. Churches today are becoming more and more ecumenical, embracing the new age interfaith agenda, and denying Christ as the only way to salvation.

---


**21 நாட்கள் உபவாச ஜெபம்**

**FASTING PRAYER**

**ஏப்ரல் 1 திங்கள் முதல் 21 ஞாயிறு வரை**

# 4 ALLs of PRAYER

*"Praying always with all prayer and supplication in the Spirit, being watchful to this end with all perseverance and supplication for all the saints" (Ephesians 6:18).*

There is one thing that really jumps out from this verse. It is the constant repetition of "all." In fact, there are four distinct "all's" in this one brief sentence.

1) **ALL TIMES.** The first all is part of the word "always". The true believer lives in a constant attitude of prayer. Paul uses this same sentiment in his letter to the Thessalonians, "Pray without ceasing." (1 Thess. 5:17). Jesus admonished us to watch and pray always (Luke 21:36). Yes, our communication with God must be a continual habit (Acts 10:2; 12:12).

2) **ALL KINDS of prayers.** Since our prayer life is constant, there are many varieties of prayer. A Christian should have regular, scheduled, focused times of prayer as well as unexpected emergency prayers. Some prayers are full of praise and worship, while other prayers are full of sorrow and confession. We must practice praying in spirit, fasting prayer, intercessory prayer, thanksgiving prayer, confession prayers, wrestling prayer etc. This is what Paul meant by "all prayer".

3) **ALL PERSEVERANCE.** This means you don't give up. Prayer is not easy or natural. It takes hard work and perseverance. In fact, it may take all the perseverance we have! Who are you praying for? Jesus encouraged us to be persistent in our prayers (Matt. 7:7; Luke 18:1-8).

4) **ALL THE SAINTS.** This is the object of our prayers. Nothing is off limits. Everyone needs our prayers, especially other believers! (the saints) Nothing is too big for God or too insignificant for God. We should pray for all things and all people.

Unfortunately, we are pretty good at praying sometimes in some varieties of prayer with some perseverance for some of the saints. But God wants more. He wants all!

---

**VBS 2019**

ஏப்ரல் 29 திங்கள் முதல்
மே 4 சனி வரை



## Sunday Services - ஞாயிறு ஆராதனைகள்

| | | |
|---|---|---|
| I Tamil Service | 7.00 am - 8.45 am | முதல் தமிழ் ஆராதனை |
| English Service | 9.00 am - 10.45 am | ஆங்கில ஆராதனை |
| II Tamil Service | 11.00 am - 12.30 pm | 2-ம் தமிழ் ஆராதனை |
| Evening Service | 6.30 pm - 8.00 pm | மாலை ஆராதனை |
| Children Service | 7.30 am, 9.30 am | சிறுவர் ஆராதனை |
| Youth Meeting | 2nd Sunday-11.00 am (Eng)<br>1st & 3rd Sunday-4.30 pm (Tamil) | வாலிபர் ஆராதனை |

## Weekly Meetings - வாராந்திர ஊழியங்கள்

| | | |
|---|---|---|
| Family Counselling | Tuesday - செவ்வாய்<br>10.30 am - 1.00 pm | குடும்ப ஆலோசனை |
| Women's Prayer | Thursday - வியாழன்<br>10.30 am - 1.00 pm | பெண்கள் ஜெபம் |
| Men's Fellowship | 3rd Monday -<br>மூன்றாம் திங்கள்<br>7.00 pm - 8.30 pm | ஆண்கள் ஐக்கியம் |
| Prayer Cells | Wed/Thu -<br>புதன் / வியாழன்<br>7.00 pm - 8.00 pm | ஜெபக்குழுக்கள் |
| Intercessory Night Prayer | 1st Friday -<br>முதல் வெள்ளி<br>7.00 pm - 10.00 pm | மன்றாட்டு இரவு ஜெபம் |
| Chain Prayer | 4th Friday -<br>நான்காம் வெள்ளி<br>6.00 a.m - 6.00 a.m | சங்கிலி ஜெபம் |
| Early Morning Communion Service | 1st Day of the Month,<br>மாதத்தின் முதல் நாள்<br>5.00 a.m - 6.30 a.m | அதிகாலை திருவிருந்து ஆராதனை |
| Music Class | Tuesday - செவ்வாய்<br>6.00 p.m - 8.00 p.m | இசை வகுப்புகள் |

## Deliverance Fasting Prayer - விடுதலை உபவாச ஜெபம்

**இரண்டாம் சனிக்கிழமை**

**காலை 10.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை**

*பாவம், சாபம், வியாதி, கடன், பில்லிசூனியம் ஆகிய கட்டுகளிலிருக்கிறவர்களை அழைத்து வாருங்கள். இயேசு அற்புதம் செய்வார்! இயேசு விடுதலை தருவார்!*

**அனுமதி இலவசம்! மதிய உணவு உண்டு!**

# City Revival A.G. Church

*Warmly Welcomes you to the*

## PRAISE & WORSHIP SERVICES

**EVERY SUNDAY**

Tamil Service - 7.00 a.m,
11.00 a.m
English Service - 9.00 a.m
Evening Service - 6.30 p.m

**ஞாயிறு தோறும்**

தமிழ் ஆராதனை 7.00 மணி,
11.00 மணி
ஆங்கில ஆராதனை 9.00 மணி
மாலை ஆராதனை 6.30 மணி

**Venue : A/c Hall, 1st Floor, JENNE PLAZA,**
No.5, Bharathiyar Salai, (Near Head Post Office),
Cantonment, Trichy - 1.

Anointed and Lively Worship, Soul-stirring Music
& Practical, Life-changing Messages

*Come with your friends & family &*
*Receive the blessings of God*



Sunday School is conducted for
kids below 14 years





**Rev. Dr. JERRY DANIEL**

Cell : 94434 15484, 98423 15484
www.facebook.com/jerrydanieltrichy
jerrydanieltrichy@gmail.com
www.cityrevivalagchurch.org